ஓலை 44 | ஓசை 154 | மடங்கல்(ஆகத்து) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை




## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை**
**வாயின் அதுவொப்ப தில்.**

யாரிடத்திலும் எக்காலத்திலும் மறந்தும் சோர்ந்திருக்காதத் தன்மை தவறாமல் பொருந்தியிருக்குமானால், அதற்கு ஒப்பான நன்மை வேறொன்றும் இல்லை.

**Translation:**

Towards all unswerving, ever watchfulness
of soul retain,
Where this is found there is
no greater gain.

**Explanation:**

There is nothing comparable with
the possession of unfailing
thoughtfulness at all times;
and towards all persons.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்

### அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

# நெற்பயிர் விளை

**பா வகை : முந்நாற் சீரிரட்டை வியநிலைச் சிந்து**

உழவின்றி ஏதிங்கே உலகு - நாளை
உணவின்றி வாழ்ந்திடுமா உயிர்கள் இங்கு
செழிப்பினை சிறப்பாக்க சேர்த்தோட்டு - காளை
சேற்றினிலே கால்வைத்தால் சிறந்தோங்கும் நாடு

நெற்பயிர் விளைச்சலே நேர்நின்று - காக்கும்
நெருப்பாக எரிக்குமந்த நிகரில்லா பசிக்கும்
கற்றிட்ட நல்லறிவால் கழனியில் - தொழில்நுட்பம்
கலையாக கருவியாக கலந்திட்டால் செழிக்கும்




பசிப்பிணி போக்கிட பயிரிட - வேண்டுமே
பாரதும் வறுமை பாராது வளர
நசிபடும் உழவன் நலிவதைத் - தடுக்கவே
நாட்டை ஆளும் நல்மனம் காக்கவே

பணத்தின் பின்னே பாய்ந்திடும் - மடமையை
பாரினில் அழித்தே பயிரிடச் செய்வோம்
மணக்கும் மண்ணில் மலரட்டும் - நெற்கதிர்
மறுமலர்ச்சி பூக்க மாண்பினை ஏற்றுவோம்

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# எங்கள் சுதந்திரம் வாழியவே

அடிமை மூழ்கிய
ஆழியின் பேரலை
விழுமி எழுந்ததே
வீணர்கள் விழ்ந்திட

அடிமை கைவிளங்கு
ஆண்டுகளாய் கிடக்குமே
உடைக்க எழுந்திடு
ஊழ்பகை வென்றிடு




கைத்தடியில் அகப்பட்டு
கைவிளங்கு உடைந்திடுமோ.
சத்தமின்றி ரத்தமின்றி
சரித்திரத்தில் நுழைந்திடுமோ.

தடிக்கொண்டு ஓடவில்லை
தரங்கெட்ட ஆங்கிலேயனே.
வங்கத்தின் சிங்கத்திடம்
வகையாய் சிக்கிக்கொண்டு

சீழ்படிந்த அடிமைத்தனம்
சிதறடித்த காவலனே.
காலனிடம் அகப்படாத
கலங்கரை விளக்கமே

மாற்றத்தந்த நாயகனிடம்
மரணமே கெஞ்சிடுமே.
ஆயுதத்தை நீயெடுத்து
அரசனாய் நின்றாயே

காலனி ஆதிக்கத்தை
கால்தெறிக்க ஓட்டினாயே
புதியதோர் விடியலாய்
புதுவிரவில் பெற்றாயே.

சுதந்திர தாகமாய்
தனிந்திட்ட நெஞ்சத்தில்
ஈரேழு (77) சுதந்திரம்
இந்தியரை பறைசாற்றும்.

கவிஞர் ஏ.தேவராஜ்,சென்னை

# பள்ளிப் புத்தகத்தின் முதல்பக்கம்

முளைவிடும் பயிர்கள்
சாதி வெள்ளத்தில் மூழ்கி
அழிவது ஏனோ?

எழுதுகோலை பட்டை தீட்டி
வெற்றி வானத்தைத்
தொட வேண்டிய
பிஞ்சு மனங்களில்
சாதியெனும் அரளி விதையை
புதைத்து வைத்தது யாரோ?



பள்ளி செல்லும் பட்டாம்பூச்சிகள்
புத்தகப்பூவை விடுத்து
சாதிமலத்தில் அமர்ந்தது ஏனோ?

வரலாற்றில் தடம் பதிக்க
பறக்க வேண்டிய கல்விச்சிட்டுகள்
வெறிகொண்ட சாதிநாயாய்
அரிவாளைத் தூக்கி
ஓடி ஓடி வெட்டுவது ஏனோ?

சாதித்தீயை அணைத்துவிட்டு
ஆழ்ந்து உறங்கிய பெரியாரை
மெரினாவில் முழக்கமிட்டு
எழுப்ப வேண்டிய நேரமிது!

கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்

# மைத்தூரிகை

இயற்கை ஓவியன்
அயராது வரைவான்

நீல விதானத்தில்
நித்தமும் ஓவியம்.

விடிவெள்ளி புள்ளியில்
விடியலைத் தொடங்குவான்

செம்பஞ்சு குழம்பைச்
செம்மையாய்த் தொட்டே

கீற்றாய்ப் பரப்புவான்.
நாற்றில் படருவான்.

நீர்க்குமிழிகளில் வண்ணம்
நீரோடையில் தெளிப்பான்.

உயிர்வளி நல்கும்
உயர்மர இலைகளில்

ஊடேக் கீற்றாய்
ஊடுருவியே நிழலாவான்.

கோலமிடச் செடிகளில்
கோலமிகு மலர்கள்.

காற்றில் பரவும்
நாற்றம் நுகரும்



வண்ணத்துப் பூச்சிகள்
வண்ணமலர் இதழ்களில்

மகரந்தம் தொட்டே
மகிழ்வாய் நடனமிடும்.

புல்லின் நுனியில்
சின்ன வெண்மகுடம்.

நேற்றைய மலர்கள்
காற்றிலே உதிர்ந்தே

நலம்பேண நடப்போரின்
உளம் மகிழ வாழ்த்தியே

சாலையில் வரையும்
காலையில் வண்ணக்கோலம்.

அந்தியில் வானம்
சிந்தும் வண்ணம்

பார்த்த புட்கள்
பார்ப்பொடுக்க பறந்திடும்.

வானில் விண்மீன்களை
வாகாய் வரைந்தே

மையிருளில் மறைந்தே
மைத்தூரிகையை உதறுவான்.

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# கனவே காலம்

விழி இடைவெளியில்
விஞ்ஞானம் புதுக்களவில்
நீண்ட உறக்க உடன்பாட்டில்
சிம்ம கர்ச்சனை



களவிலும் கற்பிலும்
ஆழ்மனக் குறுதி ஓட்டத்தில்
பிழை? நினைவில் கனவு களம்
கொஞ்சம் காத்திரு
விழித்திரை கனவுத்திரையென

அறத்தின் ஆணவ நிலை
ஆங்காங்கே மாயிரம் மாண்பில்
மனித மடமையில்
மண்ணுக்கும் விண்ணுக்கும்

அச்சத்தின் உச்சம் இல்லா உடல்
ஒரு ஊனத்தின் ஊண்டுகோல்
எதிர்த்து எழுவாய் இல்லா நிலை
அவை பிணைப்பில்

அன்பின் சங்கிலி
சௌசத்தின் கால ஓட்டத்தில்
காதலோ புலால் விருந்து போல்
பலர் விடையறிய

புகழின் உச்சத்தில்
நான் என நயம் இல்லா
அரங்கேற்றம் நடிப்பை தொட்டு
பாவனை பலரசம்

இருக்க பிணைப்பில்
இரக்கமில்லாமல்
நொந்து போகும்

உடல் உள்ள கிளர்ச்சி
பெருந்தகை
மருந்தாக மாய

பிம்ப சிந்தனை
சிரம் ஆற்றும் ஆக்கம்
சுவை கானதே ?
கனவு பூங்காவனத்தில்.

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# ஆகாயம்


ஆகாயம்
ஒரே வியப்பாய் இருக்கிறது.
பகலில் ஒளிரும்
ஒற்றைச் சூரியனும்
இரவில் மிளிரும் குண்டு நியானும்
சிதறிக் கிடக்கும் நட்சத்திரங்களும்
காண ஆகாயம்
மேலும் மலைப்பாய் இருக்கிறது.
இரவென்றும் பகலென்றும்
பாராது பாரமின்றி மிதக்கும்
மிதவை முகில்களும்
ஆகாயம் பெரும்
பேறாய் இருக்கிறது.
மழை
இதைச் சொல்ல
வார்த்தைகளில்லை.
காற்று
அதன் பேதமற்ற நிலை
சமத்துவத்தின் குறியீடு.
வான் நோக்கித் திறக்கும்
அக்னியின் வாய்.
ஆகாயம்
அடடா திகைப்பாய் இருக்கிறது.
நேற்றல்ல இன்றல்ல
என்றுமே.
ஆகாயம் அலாதிதான்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# மதிமுகம்

என் மன வானில்
பவனி வரும் என்னவளின்
அழகு முகம்!
அகத்தின் நிறைவை
பளிங்கெனக் காட்டிடும்
அவள் மதிமுகம்!
கருநீல வானில்
தாரகைகளின் துணையோடு
முழுநிலவாய் வலம் வரும்
வெண்ணிலா இல்லையவள்!
அன்பு கொண்ட நெஞ்சத்தோடு
காலம் முழுதும் காதலோடு
என்னுடன் கூட வரும்
தேய்ந்திடாத மதிமுகம்!



கவிஞர் லதா சுப்ரமணியன்

# ஹைக்கூ

1
தகிக்கும் சூரிய வெப்பத்தில்
தப்பிப்பிழைத்திருக்கும்
அடர்மர நிழல்
2
அந்தி வானத்தில்
அலையலையாக அசையும்
கூடடையும் குருவிகள்
3
இலையுதிர் காலம்
மெல்ல விடைபெறும்
கோடை வெப்பம்
4
இரத்ததானம்
வழங்க வழங்க ஊறும்
இரக்க உணர்வு
5
நீல வானம்
தொட்டுப் பார்க்கும்
நீர்க்குமிழியில் செவ்வெறும்பு
6
கோடையில் குளம்
மெல்ல நிரம்பும்
கானல் நீர்
7
அதிகரித்த பயணிகள்
உந்துருளிப்பயணத்தில்
உடைந்துபோனது சாலைவிதி



1
scorching sun
gets escaped
dense trees shadow.
2
sky in dusk
move as waves
nest returning sparrows
3
deciduous period
taking leave slowly
summer hotness.
4
blood donation
secreting as go on giving
pitiful feeling.
5
bluesky
feels touching
wood- ant on water bubble
6
summer pond
gets filled up slowly
mirage.
7
car travel
passengers increased beyond limit
traffic rules got broken.

Trans: Bommidi Mohandoss.

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# எங்கே செல்லும் இந்த பாதை?

தட்டில் சோறில்லை;
ஒட்டிய வயிற்றோடு
வட்டிக்கு காசு வாங்கி;
அடைக்க வேலையில்லை!
பட்டினி கிடக்கையில்;
தன்மானத்திற்கு இடமேது!
கட்டில் சுகந்தான்;
விற்றது உடல்தான்.
சட்டென்று பேசிட;
கூட்டத்தான் கூடுது.
பொட்டில் உறைத்ததுபோல்;
நாந்திகிட்டு சாகச்சொல்லி.
எட்டி உதைப்பேண்டா;
அழும்போது எங்கே போனே?
ஒட்டியாணம் போட்டுக்கவா;
சீவி சிங்காரிச்சேன்!
ரோட்டுப்பக்கம் போனேனா;
பிச்சையேனும் போட்டுயிருக்கலாம்!
மொட்டைக்கூட;
விட்டுவிடவில்லை ?
தொட்டில்குழந்தை திட்டம்;
முழுமூச்சாச்சு!




கவிஞர் திருமதி மோ.கோமளாநேதாஜி

# இயற்கை

இயற்கை அழகை நான் ரசிக்க
இயற்கையும் என்னை ரசித்து சென்றது
சூரியன் அழகில் செவ்வானம் சிவக்க
வானம் அழகாய் காட்சி தந்தது
அந்தி வேளையில் பறவைகள் வானில்
வட்டமடித்த செல்ல குயில்களும் பாடின
காதலர் கைக் கோர்த்து செல்ல
வான் மழையும் சில்லென சாரலாய்
அவர்கள் மேனியை தீண்டி சென்றது
நேரம் செல்ல செல்ல வர்ண
கோடுகளால் வானம் பிரகாசித்து சென்றது
கற்பனை கலந்த கவிஞன் பார்வையில்
இயற்கையை எனது எழுது கோல்
எழுதிட நானும் மெய் மறந்து
எழுதத் தொடங்கிய வேளையில்
ஜன்னல் காற்றும் என்னை இழுத்துச்
செல்ல நானும் அருகே மயங்கினேன்



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# அய்யனார் ஈடாடி கவிதைகள்

1.
திட மாத்திரை
வில்லைகளோடு
மஞ்சப்பையை
அலசியெடுத்து
தொலைவு நீண்ட
பொழுதைக் கழிக்கும்
கிடா மீசை அப்பாவுக்கு
அரும்புகின்றன
மரணத்தின் வலிகள்
தொலைத்த நினைவுகளின்
மௌனப்பார்வையில்
நகர்கிறது
மெல்ல அசையும்
பூங்கண்கள்.

2.
சிதைந்த உடல்களின்
கரும்புகை குடித்த
ஒத்த வீட்டு
மயானத்தின் தகரக்கொட்டறை
கருக்குடித்த மேகங்கள்
அலப்பிவிடும்
சூட்டுப்பழங்களை
மெல்லச் சுவைக்கிறது
எழும்பும் தீயில்
கருகும் உடல்கள்
கனத்து எரியும்போதும்.



3.
கண்டங்களாக்கப்பட்ட
இளம் மேனியில்
நரம்பினூடே
சொடுக்கி வழிந்தோடுகிறது
வெதுவெதுப்பான
குருதி சொட்டுகள்
கொடூரத்தின்
உச்ச வெளியில்
நகர்கிறது
நீள் படுகொலைகள்.

கவிஞர் அய்யனார் ஈடாடி

# கொடியின் சாயல்

அந்த பள்ளியில்
தேசியக்கொடி ஏற்றுகையில்
மழை பொழிகின்றது

முடிப்பை அவிழ்த்ததும் காற்றில்
வண்டாகப் பறக்கின்றன பூக்கள்

நல்ல சகுனம் என்றவர்களின்
ஆடைகளில் கொடியின் சாயல்

ஞானக்குளியலில்
பள்ளி வளாகம் முழுமையாக
வெள்ளையடிக்கப் படுகின்றது

ஒரு மீட்சிப்பண்பில்.



கவிஞர் ஜேபி நீக்கிழார்,துரைப்பாக்கம்

# சிலப்பதிகாரம் (ஐந்து)

3. நாளங்காடியின் சிறப்பு உரைத்தல் :
இரண்டு போர்க்களங்களின் நடுப்பகுதியே இரு பட்டிணங்கள்
மரங்கள் அடர்ந்து வளர்ந்த வனங்கள் , சோலைகளை உடையது
மரங்களின் அடிப்பாகமே கடைகளாக அமைந்த சிறப்புண்டு
சிரைத்தியான சித்திரா பௌர்ணமியில் வழிபாடு நடைபெறும்

4. விழா எடுத்தலின் சிறப்பு உரைத்தல்
இந்திரன் அனுப்பிய ஒரு பூதம் புகாரின் காவல் தெய்வமாகும்
அந்த பூதத்திற்கும் இந்திரனுக்கும் எடுக்கும் விழா இந்திர விழா
வெந்திறல் மன்னனும் மக்களும் இன்புற்றிருக்க வழிபடும் விழா
எந்த நாளும் மக்களின் நலன் கருதி மக்களே கொண்டாடும் விழா

5. ஐந்துவகையான மன்றங்களை உரைத்தல் .
ஒளித்து வைத்து களவாடுபவர்களை தண்டிப்பது வெள்ளிடை மன்றம்
வளி இடர்பாடுகள் நீங்க புனித நீராடும் பொய்கை இலஞ்சி மன்றம்
ஒளிபட வாழ நலிவுற்றவர்கள் துன்பம் நீக்கும் நெடுங்கல் நின்ற மன்றம்
களிநெஞ்சர்கள், தீயவர்கள் புடைத்து உண்ணும் பூதசதுக்க மன்றம்
விளிம்பு நிலைப் பெண்களின் அநீதிகளை ஒடுக்கும் பாவை மன்றம்

6. கொடியேற்று விழா;
வெள்ளை யானை மீது முரசு முழங்க இந்திர விழா ஆரம்பமாகிறது
வெள்ளிக் கொடி கம்பத்தில் வானுயர நெடுங்கொடி ஏற்றப் பட்டது
அள்ளி இறைத்தது போல் திண்ணைகள் தோறும் நவமணிகள் தோரணம்
முளைத்த பாலிகைகள், பூரண கும்ப பொற்குடம் வீதிகளில் நிறைந்தன.

7. இந்திரனை காவிரி நீரில் நீராட்டுதல்:
ஐம் பெருங்குழு, அமைச்சர் புரோகிதர் போன்றோர் வலம் வந்து,
எண்பேர் ஆயம் , நான்கு படை வீரர்கள், நகர மாந்தர் ஒன்று சேர்ந்து
"நம் மன்னன் புகழ் ஓங்குக," வாழ்த்துக்கள் புகார் முழுதும் ஒலிக்கும்
தம் நாட்டின் காவிரி நீர் கொண்டு இந்திரனுக்கு புனித நீராட்டினர்.

8. திருவிழாக் காட்சிகள் :
சிவன், முருகன், பலதேவன், திருமால் ,கோயில்களில் வேள்விகள் நடந்தன
புவனியில் இருக்கும் அருகர், புத்தர் தருமச்சாலைகளில் சரணங்கள்
சைவ சமய இசை விற்பன்னர்களின் கலைநிகழ்ச்சிகள் ஆங்காங்கே
ஓய்தல் துயிலுதல் இன்றி வீதிகள் தோறும் விழா ஆரவாரம் போற்றி




9. ஆடவரும், மகளிரும் களித்து மகிழ்தல்
ஆண்கள் தங்கள் மனதுக்குப் பிடித்த பெண்களைத் தேடி அலைந்தனர் .
பெண்கள் வண்ண ஆடைகளில் கை வளையல் குலுங்க ஆடிவந்தனர்
கண்களால் மனம் கவர்ந்தவனை தூண்டில் புழுவாக துடிக்க வைத்தனர்
விண் நிலா பூமிக்கு உலா வந்ததுபோல் பெண்கள்மிதந்து வந்தனர்

10. இந்திர விழாவில் கோவலன்,மாதவி, கண்ணகி:
கண்ணகி கணவனை பிரிந்த சோகத்தில் கண்களில் கண்ணீர்
கண்ணுக்கு கண்ணான காதலன் மாதவிக்கு ஆனந்தக் கண்ணீர்
காவலனை நினைத்து கண்ணகி இந்திர விழாவைத் தவிர்த்தாள்.
பாவம் அவளைப் பார்த்து திங்களும் மேகத்தில் மறைந்தது

கவிஞர் ந.திருக்காமு

# கொடுங்கோன்மை

குடிவருத்தி கொடுஞ்செயலால்
நாடாளும் கோனொருவன்.
கொலைத்தொழிலை குலத்தொழிலாய்
கொண்டோரிலும் கொடியோனாம்.




செங்கோலேந்திய கோமகன்
குடிகளிடம் கடுவரிகேட்பது
வேலேந்திய கள்வன்
வழிப்பறி செய்வதுபோலாம்.

ஆட்சிநிலை அவ்வப்போது
ஆராய்ந்து முறைசெய்யாவிடின்.
தன்நாட்டை நாட்பட
இழந்துநிற்பான் மன்னன்.

பின்விளைநோக்கா தன்னூப்பாய்
அரசோச்சும் மன்னன்.
தன்குடிகளின் தனமுமன்பும்
ஒருங்கே இழப்பான்.

கொடுங்கோலால் அல்லலுறுங்குடிகள்
தாழாமல் வடிக்குங்கண்ணீர்.
முடியின் செல்வமெல்லாம்
அழிக்கும் படையாகிடும்.

செங்கோலே மன்னனின்
புகழுக்கு அடித்தளம்.
கோல்முறை மாறிடின்
புகழெலாம் அழிந்துபோம்.

மழையில்லையேல் உலகிற்கு
பிழையாகி துன்பம்நேருமாப்போல்.
மன்னனருள் இல்லையாகில்
மக்கள்வாழ்வு துன்பமாம்.

முறைசெய்யா மன்னனின்
குடிகளாய் இருக்கப்பெற்றால்.
வறுமையிலும் தனச்செல்வமே
பெருந்துன்பம் கொணரும்.

கோமகனின் கொடுங்கோலுக்கு
பருவமழையும் மேகங்களும்.
பூமிநனைக்காது வழிதவறி
வானோடு ஒதுங்கிப்போம்.

கோமுறை கொண்டாள
கோமகன் தவறிடின்.
கோக்களெல்லாம் பால்சுரக்காது
அறுதொழிலோரும் அறநூலறுப்பர்!

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# குடி கெடுக்கும் குடி

ஆம்
எங்கோ ஓர் மூலையில் குடிமக்களை கெடுக்கும் குடி
படிக்கும் வயதில் பல இன்னல்களை கொடுக்கும் குடி
குடியை நிறுத்த ஆயிரமாயிரம் விளம்பரங்கள்,
குடிக்கும் கடையை நிறுத்த
பல்லாயிரம் தேர்தல் வாக்குறுதிகள்
அத்தனை மாற்றமும் ஏமாற்றமே
தந்தையின் குடியை நிறுத்த
பிள்ளையை பறிகொடுத்த தாய்
குடிக்கு பணமில்லாமல் தாயை கொன்ற மகன்,
குடிபோதையில் செய்த கூட்டு பலாத்காரம் - என
செய்தித்தாளின் தெரிந்த பக்கங்கள் இவை
இன்னும் எவ்வளவோ,
குடியால் தொலைந்த குடும்பங்கள் அதிகம்,
குடியால் இழந்த கற்புகள் அதிகம்,
குடியால் மறைந்த மனிதர்கள் அதிகம்,
குடியால் கிடைத்த குடியரசின் வருமானம் அதிகம்,
குடியால் கிடைத்த கூட்டு அரசியல் அதிகம்
குடியால் உருவான ஊழல் அதிகம்,
என
இங்கு ஆயிரம் சொன்னாலும்
மாற்றம் என்பது தனக்குள் வேண்டும்
தன்னலம் மறந்து அடுத்தவரை தவிக்க விட்டு
குடிக்கும் குடியை
குடிமகனும், குடியரசும் மாற்றினாலே,
இங்கு எல்லாம் மாறும்
காத்திருப்போம்.



கவிஞர் தேடல் மணி,நாமக்கல் மாவட்டம்

# கிறுக்கல்கள்

அழகாய் வரைந்த ஓவியத்தினூடே
ஆராதிக்கும் சில கிறுக்கல்கள்!

வித்தியாசமாய் வலம் வரும் பூமியிலே
விமரிசையாய் சில கிறுக்கல்கள்!

நெளிவு சுளிவாய் கட்டப்படும் கட்டிடத்தில்
நேர்த்தியின்றி சில கிறுக்கல்கள்!

புத்தம் புதிய புத்தாடையில்
புன்னகையாய் சில கிறுக்கல்கள்!

அன்பை ஆராதிக்கும் மனதினிலே
ஆழமாய் சில கிறுக்கல்கள்!

கண்களை மூடும் நேரந்தனிலும்
கனவாய் சில கிறுக்கல்கள்!



கிறுக்கன் என்று என்னை பிறர் நகைத்திட
கிறுக்கலாய் விழுந்தவன் எழுந்தேன்
கிரீடத்தை வாங்கும் துணிவுடனே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# எங்கள் சுதந்திரம் வாழியவே

ஆங்கிலேயரின் அடக்கு முறை தாண்டவமாட
ஆட்டி வைத்து அடிமை படுத்த
ஆடிப் போன மக்கள் இங்கே
ஆணவம் கொண்ட கூட்டம் அங்கே.

நாடு மக்களாய் இருந்த போதுமே
நாடியதை செய்ய முடியாது தவித்தே
நாளும் வேதனையால் பயந்து இருந்தே
நான்கு பக்கமும் குண்டு வெடிப்பே.

அந்நியனுக்காக உழைத்து தேய்ந்தே போனது
அந்நியனாய் சொந்த நாட்டிலும் படும்பாடு
அல்லோப்பட்டு வடித்துக் கொட்டிய நிலை
அகங்காரத்தால் முடக்கியது ஈவிரக்கம் அற்றவர்களாலே.



விடுதலை பெற்றிடபட்டது பாடு
விடுதலைக்காக இரத்தத்தை ஓட விட்டு
விழுந்த நாட்டுக் கொடியை எழுப்பி
விடுதலை பெற்ற இனிய நாள்.

பெண்களை தனியாக நடந்து செல்ல
பெண்ணவளை பொண்ணாக பாது காத்து
பெண்களை தனது தாயாக பார்த்திட
பெண்ணவளுக்கு கொடுக்க வேண்டும் சுதந்திரம்.

சாட்டை அடிகளிலிருந்து மீண்ட நாட்டிலே
சாதி மத ஒற்றுமை உடன்
சாந்தி நிலவிட காப்போம் தினம்
சாமாதனத்துடன் வாழ்வோம் சுதந்திர நாட்டிலே.

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# நாங்குநேரி

சிகை அலங்காரம் செய்து கொண்டு
சீருடை அணிந்து கொண்டு பள்ளிக்கு சென்றார்களோ!
சாதி எண்ணங்கள் கொண்டு
சாதிக்கு ஒரு வண்ணங்கள் கொண்டு
கைகளில் கயிறை கட்டி
கட்டை விரலை நெஞ்சில் ஒட்டி,
இந்தியா என் தாய் நாடு இந்தியர் அனைவரும்
என்னுடன் பிறந்தோர் என உறுதிமொழி எடுத்தார்களோ,
இருக்கையின் முகப்பில் வீச்சி அறிவால் வரைந்து வைத்து,
தலைவர்களின் பெயரை பொரித்து,
அதன் மேல் பாட புத்தகத்தை வைத்து
அதன் முகப்பை பிரட்டி
தீண்டாமை ஒரு பாவ செயல் என்னும்
வாக்கியத்தை படித்தார்களோ,
பட்டியல் இனத்தவன் உங்கள் பட்டியலில் இணையாதவன்
அவன் படிப்பதில் உனக்கென்ன பாவம் வந்து சேர்ந்தது,
அடிமைதனம் செய்தார்கள் அடக்கி வைத்து பார்த்தார்கள்,
அடித்து உதைத்து தீர்த்தார்கள்,
பொறுத்து கொள்ளாத மனம் புகார் அளித்தது,
ஏற்று கொள்ளாத மனம் வெட்டி தீர்த்தது,
சதைகளின் கிழிசலில் சாதி வெறி தெரிந்தது.
குருதியின் பாய்ச்சலில் சமூக நீதி அழிந்தது.
குடிக்கும் நீரிலும் மலம் கலந்தது,
வீசும் காற்றிலும் விசம் பரவுது,
பிஞ்சி நெஞ்சிலும் சாதி நஞ்சி மலருது,
குற்ற உணர்வில்லாமல் கொடூர கொலைகள் நிகழுது,
நாளைய தலைமுறை சாதி பெருமையில் வாழுது,
மனிதம் பேசி புனிதம் செய்ய,
சமத்துவம் பேசி புரட்சி செய்ய,
பல வன்கொடுமைகளுக்கு எதிராய்
எங்கள் வாழ்வியலும் தொடருது.




கவிஞர் ஞா.மணிமாறன்,இரெட்டியூர்

# இந்தியா ஜிந்தாபாத்

(சுதந்திர தின சிறப்புக் கவிதை)

மிதவாதமோ, தீவிரவதமோ
பிடிவாதமாகவே
இருந்ததால் தான்
கிடைத்தது சுதந்திரம் !

செப்பு மொழி பதினெட்டுடையாள்
எனில்
சிந்தனை ஒன்றுடையாள் !

வடக்கே இமயமும்
தெற்கே குமரியும்
கொடுத்தாய் !
கிழக்கும், மேற்கும்
ஆழ்கடலையும்
கொடுத்தாய் !

பரந்து விரிந்திருக்கிறது
நம் பாரத தேசம்,
பாருக்குள்ளே அடங்காது
இனி
அதன் சுவாசம் !

அகிலத்தை இந்தியா
ஆளப் போவது நிச்சயம் !
ஐ. நா பாதுகாப்பு அவையில்
நிரந்தர உறுப்பினர்
ஆவது சத்தியம் !
அதற்கு
நாம் நாட்டுப் பற்றுடன்
இருப்பது அவசியம் !

ஆயுதம் செய்வோம்,
நல்லக் காகிதம் செய்வோம்,
அணுவைத் துளைத்து
ஏழுக் கடலையும்
புரட்டுவோம் !



இனியொரு விதி செய்வோம்
அதை
எந்நாளும் காப்போம்,
அது
தனியொருவனுக்கு கல்வியில்லையெல்
ஜகத்தினை அழிப்போம் !

எங்கும் இருக்கும் இந்தியனே கேள்
எங்கிருந்தாலும்
இந்தியனாய் மட்டும் இரு
அது போதும் நாட்டுக்கு,

சாதி, மதத்தை வைத்துக் கொள்
வீட்டுக்குள்,
நாட்டை வைத்துக் கொள்
நெஞ்சுக்குள்,

மக்கள் தொகையில்
முதல் நாடு நம் இந்தியாவை
திறன் மிகு முதல் நாடு
என
இந்தியாவை உருவாக்குவோம்,

பல வண்ணக் கட்சிக் கொடிகளே
மறைத்து விடாதே
என் தேசியக் கொடியை மட்டும் !

பாரதம் எங்களின் சுவாசமே !
தாய் மண்ணே வணக்கம் !
ஜெய்ஹிந்த் !

கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# தகுதித்தேர்வு அரசியல்

தன்னம்பிக்கை விதைக்கும் கல்விச்சாலை
வணிகக் கூடமாக காட்சி தருகிறது!
கற்பித்தல் முறைமைகள் தடம்மாறி
கற்றல் சூழலை மாற்றி விட்டது
கட்டமைப்பு பிழைகள் கற்போர் கனவை
காவு வாங்கி நிற்கிறது!
தேர்வு அரசியல் விளையாட்டால் தூக்கம்
தொலைத்து துக்கத்தில் நிற்கும் குமுகம்!
துயர் துடைக்கும் திணைக்களம்
கண்துடைப்பு அரசியல் செய்கிறது!



கவிஞர் செ.தமிழ்நேயன்

# கருவாட்டுக்காரி

கரைச்சைக் காற்று உப்பில் கறிசட்டி துருப்பிடிக்கும்
கறுவாட்டு நாற்றத்தில் காக்கைக் கூட்டம் கனகனக்கும்
புருசனென்ற பெயரில் ஒருவன் களவிகொள்ள வந்தான்
கடைசிவரை கசிப்புக் கடையிலே காலத்தைக் கழிப்பான்
முட்டிமோதி பெத்துப் போட்டன் மூன்று பிள்ளை
மூத்ததுக்கு வயதோ  மூன்றினெட்டு அதுபடிச்ச வகுப்போ எட்டு
கட்டிவைக்கும் காலம் வந்து கண நாளாச்சி
கறுவாச்சி மக மூஞ்சி கறிசட்டி போலாச்சி
வரன் தேடி வரன் தேடி வயதுதான் போயாச்சி
வாசல் வரை வருவார்க்கு கறுவாட்டு வாசமே விருந்தாச்சி
காறியுமிழ்ந்து செல்கிறார் ஒரு காரணமும் இன்றியே
பக்கத்து வீட்டு பார்வதி மகள் பலவண்ண முகக்களிப்பு
பூசிப்பூசி வெள்ளையாகி வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு வரனாகினாள்
சாம்பல் போட்டு தேய்ச்சாலும் வெளுக்காது என்வீட்டுப்  பாத்திரம்
அதுபோல பாலேடு போட்டாலும் வெளுக்காது அவள் முகம்
சொந்தமென்று நினைத்ததில்லை சொந்த பந்தம் வரன் கேட்டாளும் தருமா?



இடையில பொறந்ததுதான் இருளுக்கு வெளிச்சமாய்
இரவுபகல் பாராது உழைக்குது பெரும் கஷ்டமாய்
மேல்படிப்பு படிச்சிருக்கு மேலவரும் என நம்பிருக்கு
பெரும் வலி பட்டிருக்கு பெருமானே வழி சமைத்திடும்
உப்பாற்றில் தோணியோட்டி மீன் புடிச்சி தருகுது
பிடிச்சமீன் கறுவாடா தொட்டியில வேகுது
வயசிக்குவர முனுவருசம் இருக்கையில குத்தவச்சா
உடுத்த பாவாட மாத்திக்க உடுக்கையில்ல இதுக்கு தாவணிக்கு எங்கபோவன்
காஞ்சி காஞ்சி உழைச்சாலும் பஞ்சம் குறைஞ்சதில்லை வயிறு நிறைஞ்சதில்லை
கடன்காரன் முன்னாடி தலைகுனிஞ்சி தலகுனிஞ்சி கூன்விழுந்து போச்சி
இன்றுபோல் என்றுமிராது வாழ்கை
எல்லாம் ஓர்நாள் மாறும் என்று நினைப்பதே எனக்கு வேடிக்கை.

**கவிஞர் கோ.தனுசன்**

# தென்றலின் தூது பிறையிடம்

விழிகளில் கலந்தவனை
சேர்ந்து என் காதல் உரைப்பாயோ
மென்காற்றே.

பிறையவன்
என் இரவுகளைக்
களவாடியே புன்னகைக்கிறான்
எனை தீண்டிடுவாயோ என நக்கலாய்.

தென்றலும் தீண்டா தூரமதில்
மெய்யை கொண்டவன் நானென
என் வதனத்தை கண்டு நகைக்கிறான்
கயவன்
என் காதலனாய்.

வளியே செல்வாயாக
என்னவனை தீண்டி வந்து
எனை தீண்டு
நானும் அவனால் அவனுக்கே
அழகென பட.

நாணத்தில் அவன் மறைவதை போன்றே
நானும் நாணி தலை குனிந்து
வையகம் கண்ட நொடியும்
விலகாது துரத்தி துரத்தி
பிரகாசத்தால் என் நிழலில் கலக்கிறான்

தூது சென்று சொல்லிடு வாடையே
கோடையாகவோ
கொண்டலாகவோ
தென்றலெனவோ



உன்னவள் உனக்கென
காத்திருக்கிறாளென
விரைந்தோடு இரவெனும்
போர்வையால் போர்த்திடு அகிலத்தை.

உனை கண் கொண்டு காணவே
கவி கொண்டு காத்திருக்கும்
காரிகையை காத்திருக்க
வைக்காதே என உரைத்திடு காற்றே.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# வாழ்க்கை பயணம்



தாயின் மடியில் ஜனித்தோம்
அன்றொரு நாளில்!
அன்னையும் அழுதாள்
நாமும் அழுதோம் !
நமது சின்னச் சிரிப்பிலும்
புரியாத பேச்சிலும்
அவளது தாய்மை ஊற்றெடுக்கப்
பாலூட்டிச் சீராட்டி கண்ணுக்குள்ளே
வைத்து வாழ்ந்திட்டாள்!
அவள் கரம் பிடித்து
அழகாக நடை பழகினோம்!

மீன்கள் தனது குஞ்சுகளைக்
கண்களாலேயே வழிநடத்தி
வருவது போலத் தானும்
செய்தாள் ஒவ்வொரு நொடியும்!
பசிக்கு அழுதோமா
வலிக்கு அழுதோமா
என்பது அவளுக்கு
மட்டுமல்லவா புரிந்திடும்!

நடையைத் தொடர்ந்திட
தந்தையும் வந்தார்
ஆசானும் வந்தார்
நண்பனும் வந்தான்
அனைவரின் கைகளையும்
இணைத்து அழகாய் நாம்
நடை பழகினோம்!

தொடர்ந்தது பயணம்
காதலும் வந்தது
மணமும் கொண்டோம்!
இம்முறை காதல் வாசம்
அற்புதமாய் மணக்க
நமக்கான இணையுடன்
கைகோர்த்து நடந்தோம்!

நடைபழகிய நாமும்
நடக்கவும் கற்பித்தோம்
நம் பிள்ளைகளுக்கு!
முன்னொரு நாளில்
நடைபழகிய நினைவுகள்
நெஞ்சில் அலைந்திட
அதனை முன்னிலைப்படுத்தி
அழகாய் செதுக்கினோம்
அவர்களையும்!

முதுமையும் வந்தது!
நடையும் தளர்ந்தது
ஆயினும் நாம்
அனுதினமும் பயணிக்கிறோம்
புலப்படாத அந்த
ஒற்றை சக்தியை நோக்கி!

ஆன்ம ஒளியும்
பிரபஞ்ச ஒளியை
நோக்கிப் பயணிக்கிறதே
அதனுடன் ஒன்றாகக் கலந்திட!
வாழ்க்கை என்பதே
ஒளியை நோக்கிய
நடைப்பயணம் தான்
அன்றோ!

கவிஞர் மலர் அபி

# ஒரு சொட்டில் பரந்த பசி

ஒரு கொக்கியில் மாட்டிய மீனிற்காக
வளைந்தும் நெழிந்தும் கொடுக்கும் மனிதனின் மனம்
வானை வளைக்க இடம்பெயர்கிறது
ஆசையின் பசியில்.

ஓடும் நீர்த்துளிகளெல்லாம்
ஒன்றாகி நதியென பெயர்சூட்டிக் கொள்ள
ஒவ்வொரு மீனும்
துள்ளிக் குதிக்கின்றன துளிகளாகவே.

கரை உரசி சென்று தொய்வு பெறும்
நீரோட்ட சுழிகளுக்கு
யாரோ விசிறி விட்ட பொறியின் சுழற்சி
சுழுலாக உருமாறி பரவுகிறது நடைமுறையில்.

கரைக்குக் கரை கல்லெறிபவர்களின் பசிமட்டும்
ஆழத்தை தாண்டியும் குறைவது கடினமாகிவிடுகிறது
இந்த கலிகாலத்தை மிஞ்சிய பசிக்காலத்தில்.



கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# சைவ உணவு

சில காலம் முன்பு வரை
சைவம் பெருமளவாக இருந்தது
ஒற்றை எழுத்து ஒட்டிக்கொள்ள
ஒரேடியாக மாறிப் போனதே
சைவமெல்லாம் அசைவமாக
வாழும் நாட்கள் இனியும் இருக்க
வாய்ச்சுவைக்காக பலியாகிறதே
வாயில்லா சீவன்களும்.
கண்டப் பிராணியைத் தின்றிடக்
கோரத்தாண்டவமாடியே
ஊரடங்கு வந்ததும் மறந்தீரோ?
சைவ உணவில் சத்தில்லையாம்
கம்பங்கூழும் கேப்பைக்களியும்
காய்ந்த மிளகாயோடு மட்டும்
களித்தவர் கம்பீரமாக நடந்தனரே
சைவ உணவுண்டு சாத்வீகமானவர்
மிருக உணவுண்டு மிருமாயினரே
நாவின் ருசிக்காக நாள்தோறும்
நாலுகாலிகளை உண்போரே
மற்றும் ஒரு ருசிக்காக
மனிதரையும் உண்பீரோ?
கோழி அசைவமாயிருக்க
கரு மட்டும் சைவமானதெப்படி?
எங்குத் தேடியும் காணவில்லை
சைவமுட்டையிடும் கோழியினை
கண்டால் சொல்லிடுவீரோ?



கவிஞர் ஷீலாதேவி அருணாசலம்,நாகர்கோவில்

# கோவில்

மானுடன்
தெய்வம் வரைகையில்
ஒரு தெய்வம்
தெய்வம் வரைகிறது

கோவிலுக்குள்
இருந்தாலும்
ஆண்டவனை
அகத்தில் தான்
உணர முடியும்

ஆழ்மனம் எனும்
நந்திக் காதுகள்
கோவில்களில்
மட்டுமே
வேலை செய்கின்றன



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# எல்லாம் உன்னாலே

சில்லென்ற மழைத்துளி சிலிர்ப்பில்லை எனக்கு - நீ
சிந்தும் புன்னகையால் சிலிர்த்து போனதடி

மலர்களின் மனங்கூட மனக்காத எனக்கு -உன்
மேனிதரும் வியர்வைமனம் மட்டுமே பிடிக்குதடி

தித்திக்கும் தேன்கூட சுவையில் லை எனக்கு -நீ
திட்டும் வாய்மொழிகள் திகட்டாமல் இனிக்குதடி

சுடர்மிகுந்த தீக்கூட சுட்டதில்லை எனக்கு -அடி
சுந்தரியே உன்கோபம் சுட்டுவிட துடிக்குதடி

தாயின் பிரிவுகூட தாராத சோகம் -நீயின்றி
தனித்திருக்கும் அந்தநொடி தந்துவிட தவிக்குதடி.



கவிஞர் பொன் சுரேஷ்,கழனிவாசல்

# கருப்பு வெள்ளை நிழற்படம்

சுவற்றில் ஆடும்
நிழல்படம்
பல கதைகள் புனைகிறது



அப்பாவின்
அன்பு முகம் வருடிய
விரல்கள்

அடர்ந்த மீசையும்
தலைகொள்ளாத சுருட்டி
முடியழகும்

உறைந்த புன்னகை
ஒராயிரம் கதை சொல்லுது

நினைவுகள் சிதறாமல்
சிலையென உறைந்து
சற்றே இமை உடைக்கிறது

அப்பாவிற்கு மகள்கள்
அவர்களின் அன்னையின்
பிம்பம்

விரல் பிடித்த இடங்களில்
அப்பாவின் அலை
அதே பாசத்தில்

தொலையாத புதுக்கவிதை
என்றும் எடுத்து எடுத்து பார்க்க
மன ஏட்டின் சுவடுகள்
மங்காத வாசத்தில்

முழுதும் வாசிக்கப்படாத
புத்தகம் தான் அப்பாவோ
எங்கோ படித்த வாசகம்

கருப்பு வெள்ளையும் ஒரு
கவிதையின் நிழலாக
உற்று பார்த்தால் இருளின்
அழகும் ஏகாந்த தனிமையும்
எண்ணங்களின் கூடாரம்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# தகிக்கும் மண்


சிறு கூடு
எவ்விடம் பின்னுவது

நிலம்
தன் உடைகளைந்து
மானமற்று நிற்கும்
மரமற்ற வெளியில்
மின்கம்பி வாழ்
சிறு உயிரின் தவிப்பில்
தகிக்கும் மண்!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# என் ராட்சசன்



அலை கடலென உன்னை
சுற்றி பலர் இருக்க

ஆசை ஆசையாய்
அந்த கூட்டத்தில் நானும்
ஒருவளாய்

உன் ராட்சச உருவத்தை
ரசித்து நிற்கிறேன்.

வண்ண வண்ண
விளக்குகளில்
நீ ஒளிரும் போது

உன் தோற்றம்
கண்டு என் உள்ளம்
பூரிக்கிறது

தொலைவில் இருந்து
ரசிக்கும் காதலும்
அழகு தானோ

நான் உன் மேல் கொண்ட
காதலும் அப்படி தானோ

உன்னுடன் ஒன்றாகி
உயரம் மறந்து சுற்ற
ஆவல் கொள்கிறது
என் சிறு இதயம்

காதல் கொண்ட
மறு இதயமோ எட்டி
நின்று ரசிக்கிறது
உன் ராட்சஸ அழகை

ரங்க ராட்டினமே உன்
ராட்சச அழகை ரசிக்கும்

நின் ரகசிய
காதலி எண்ணத்தின்
தூறல் இவள்.

கவிஞர் ரதி ஜெயராஜ்,வல்லம்

# அவனே வேண்டும்

தொடுவானம் கருத்து
தூவானம் தூறும் நேரம்
மழை துளிகளில் உன்னை கண்டேன்
என் இதயம் துடிக்கும் நேரம்
எழுகின்ற ஓசையில்
உன் குரலை கேட்டேன்
வேண்டும் உந்தன்
அன்பு ஒன்று என்றும்
நான் வாழும் காலம்
உன் காதல் மட்டும் போதும்
உன்னை எண்ணி
என் ஜீவன் வாழும்
உன்னை சேரவே
என் உலகின் நாட்கள்
வேகம் தாண்டி சுழலும்
என் கண்கள் மூடி
எனதுயிர் பிரியும் முன்
நீ என்னை சேர்வாயோ
என் உயிரே




கவிஞர் அகிலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# வாழ்க்கை

உறவுகள் புடைசூழ
இல்லம் ஆனந்தம் பொங்கிட
விடியும் பொழுதுகள் இங்கு
குதூகலமானால் வாழ்க்கை என்பது
அழகிய தோர் கவிதைதான்.

சந்தோஷ வரிகள்
பேனாமுனைகளுடன் இங்கு
போட்டிபோட்டு மாலைசூடும்.

எதுகையுடன் மோனைசேர்ந்து
வரிகள் கூட அழகாய்
அலங்காரம் பண்ணிக்கொள்ளும்
வரிகளின் சுருதியும்
வார்த்தைகளில் தாளலயங்களும்
வாழ்வின் அழகிய தருணங்களாகும்



நிலையில்லா இவ்வுலகில்
உயிர்ப்பான உறவுகளும்
உயிரோட்டமான அன்பும் பிணைப்பும்
அழகிய கவிதைகளில் கருக்களாகும்

அவ்வப்போது விருப்பு வெறுப்புக்கள்
வாழ்வின் கேள்விக் குறிகளாகும்.
பேசமுடியா வார்த்தைகள்
மனதைக் காயப்படுத்தி இங்கு
வரிகளை ஈரமாக்கி மௌனப்படுத்தும்.
பிரிவுகள் பேரிழப்பாகும்

வாழ்க்கை என்பது
விருப்பு வெறுப்புகள் கடந்த
அழகியதோர் கவிதை தான்
காலத்தோடு குறுகிப்போகும்
அழகியதோர் ஹைக்கூ தான்

கவிஞர் ஷெண்பகச் சோலையாள் ஆய்ஷ்,இலங்கை

# என் மீசை மீது உன் வாசம்


மழை நாளில்
வெயிலோடு
உலா வந்ததென்
அழகிய பொழுது

முந்தானையின்
கலையாத மடிப்பில்
சற்றும் குறையாத
உன் வாசம்

நம் வாசத்தோடு
மடித்து வைத்த
சேலை இன்றும்
இவள் நினைவடுக்கில்

என் மீசையில்
உன் வாசம்
அந்த அழகிய
நிகழ்வே நம் வசம்

நம்
உள்ளங்கை
மச்சங்கள்
ஒன்று கூடுகையில்
துடிக்கும் இவன் உயிர்
அடங்கும் வரை
கேட்கட்டும்
முத்தச் சத்தம்!



கவிஞர் ஆர்.மோகன் ராஜ்,சென்னை


# திறன்பேசி

இரு கரங்களில் தழுவும் கருவியோ
இருதயம் துளைக்கும் நோய்க் காவியோ

அறிவினை முடக்கும் நவீன ஆயுதமோ
அன்பினை யுடைக்கும் புது வழியோ

தனிமையை விரும்ப வைக்கும் சதியோ
இனிமையைப் போல இருக்கும் இடும்பையோ

கனவுகள் பறிக்க வந்த கள்வனோ
நனவுலகை மறக்க வைக்கும் மாயமோ



சுற்றுப்புறம் அறியாத போதை வகையோ
சிந்தனையை இழக்க வைக்கும் முறையோ

நவீன கண்டுபிடிப்பின் துளி விசமோ
நல்லதெனச் சொல்லும் தீய சகவாசமோ

முழுமையாய் உதவும் என்பது சரியோ
மூளையை முடக்கும் வழிமுறையோ

நல்லதை மற்றுமே ஏற்றிட அறிவோமோ
அல்லாதவைத் தவிர்த்து நலம் பெறுவோமோ.

கவிஞர் மக்கொனையூராள்

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# என் மண் நம் நாடு

பிரபஞ்சங்களின் மிக உயரிய சக்தி,
இம்மண்ணே!
இந்திய மண்ணில் பிறந்த
ஒவ்வொருவரும் பெருமைக் கொள்வதே
இம்மண்ணின் மாண்பே யாகுமே!
அளப்பரிய சக்தி எப்போதும் என்னுள்,
இம்மண் எனக்கு எப்போதும் சொந்தமே!
என்னை உயிர்த்தெழ செய்வதும் இம்மண்ணே!
வெள்ளையன் இம்மண்ணில் கால் வைத்தான் அக்கணமே
இப்புனித மண் கெட்டதே!
நம் தூய மூச்சு அவர்கள் விட்ட மூச்சோடு கெட்டதே!
எண்ணற்ற தியாக நெஞ்சங்களில்
இடைவிடாத சுதந்திர நெருப்பு கொழுந்து விட்டு எரிந்ததே!
பாரதி பாடினானே "நெஞ்சு பொறுக்குதில்லையே"
நம் ரத்தத்தை கொதித்தெழ செய்தது, வாலாஜா படுகொலை தானே!
எத்தனை போராட்டம், எத்தனை இன்னுயிர் நீத்தும்
நாம் சுதந்திர மூச்சுக் காற்றை சுவாசிக்க,
மடிந்தார்களே, ரத்தத்தை சிந்தியே!
வாழ வேண்டிய பருவத்தில் உயிரைத் துச்சமென,
விட்டார்களே பகத்சிங்கும், கொடிகாத்த குமரனும்.
இம்மண் புனித மண், ஞான பூமி, தியாக பூமி.
"வெள்ளையனே வெளியேறு" முழக்கமிட்ட
நம் தேசத் தந்தை மகாத்மா காந்தி
உலகமே போற்றுகின்ற உத்தம புருஷர்.
அக்கால சுதந்திரம் பெற்ற பின்
நம் தலைவர்கள் நீதி, நேர்மை
சத்தியம் என்று பெயர் பெற்றுப் போனார்கள் நம் மக்களுக்காக,
இக்கால அரசியல் வாதிகளும் பாடுபட்டுக் கொண்டே
இருக்கிறார்கள் அவர் தம் மக்களுக்காக
என்று தணியுமோ இந்த ஊழலும், லஞ்சமும்
ஏழை மக்களின் விடிவெள்ளி யாரோ?



கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# துளிப்பாக்கள்

1.
உடையாத பானைகள்
அமோக விற்பனை
உழைத்தவன் பசி

2.
சிரிக்கும் புத்தர்
குறையவே இல்லை
வேண்டுதல ஆசை

3.
குளம் குடித்த வெயில்
ஏமாந்து போகிறது
முகம் காண வந்த நிலா



4.
தரிசன கடவுள்
சாலை நடுவில்
வரைந்தவன் வாழ்வு

5.
அழகான கோலங்கள்
ஏங்கித் தவிக்கின்றன
அடுக்கக வாசல்கள்

6.
அடுக்கக வாழ்க்கை
பேசிக் கொள்வதில்லை
எதிரெதிர் ஜன்னல்கள்

7.
தலைவர் அழைக்கிறார்
சாதிக்கொடியேற்ற
சமத்துவபுரத்தில்

8.
ஒருமுறை சோறு ஊட்ட
அழைக்கிறாள் அம்மா
ஆயிரம் நிலாக்களை

9.
தேர்தல் இலவசங்கள்
அதிகரிக்கின்றன
மக்களின் சுமை

10.
அறுவடையில் உழவன்
அமைதியில் குடும்பம்
ஆனந்தப்படும் வங்கி

கவிஞர் இளையவன் சிவா,நரசிங்காபுரம்

# சேக்கிழார் (தொடர்ச்சி 4)

மறவாத வரமதனை வேண்டுகின்றார் சேக்கிழாரே!
நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்!
இவ்வாறே விருப்பமுற்றார் வரதுங்கர் பாம்பன்பேர்
சுவாமிகளும் அபிராமி பட்டரென அறிகின்றோம்!
வரதுங்கர் கோரும்முறை: இருக்கினும் நிற்கும்
போதும் இரவுகண் துயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும் பொருந்தியூண்
உய்க்கும் போதும் முருக்கிதழ் கனிவா
யாரை முயங்கி நெஞ்சழியும் போதும்
திருக்கலா வுடைய நம்பர் சிந்தனை
உன்பால் தானே என்பதாய் அமையும்!
பாம்பன் சுவாமிகள் விழைவது இங்கனே:
எழும்போது வேலும் மயிலும் என்பேன்!
எழுந்தே மகிழ்ந்து தொழும்போதும் வேலும்
மயிலும் என்பேன்! தொழுது உருகி
அழும்போதும் வேலும் மயிலும் என்பேன்!
அடியேன் உடலம் விழும்போதும் வேலும்
மயிலும் என்பேன்! செந்தில் வேலவனே!
அபிராமி பட்டரோ: அல்லும் பகலும்
தொழுவார் அவர்க்கே அழியா அரசும்
செல்வம் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே
என்றுரைப்பார்! சேக்கிழாரின் பெரியபுரா ணமதனில்
முதல்நின்ற காண்டத்தே சருக்கங்கள் ஐந்தமைந்து
அடுத்துவரும் இரண்டதனில் எட்டெண்ணில் சருக்கங்கள்
கொண்டதுவே! அடியவர்கள் ஏழ்பத்தும் இருவரென
வரலாறு கூட்டுவதே காப்பியமாம் ஈதாகும்!
சூழாழி அலைகள் எண்ணல் ஆகாதே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# அவளை தேடிய பொழுது

மழை பெய்ந்து ஓய்ந்தது
மொட்டை மாடியில் சில்லென்ற காற்று
காற்று வீசிடும் திசையினில் எனது பார்வை திரும்பியது
திரும்பிய திசையை விட்டு சிறிதும் நகராமல்
எனது பார்வையோ படுக்கதிராய்
அவள் மேல் பட்டு தெறித்தது!
செங்குத்துக்கோடுகளாய் அவளின் வீட்டு சுவர்கள்
அவளை மறைத்திட துடித்தன.
இரு செங்குத்துக் கோடுகளுக்கிடையே
அவள் தெரிவதை மறைத்திட முடியாமல் தவிக்கின்றன.
தவிப்பதை அறிந்து நான் ரசித்தேன்!



கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# அமைதியின் ஆரம்பப் புள்ளி

ஆணவத்தின் ஆதிகத்தில்
ஆளுங்கின்ற மனங்களே!
அமைதியெனும் பேரானந்தமடையாமல்
நோகுதோ ரணங்களாய்?
ஆரம்பமே அறியாத
தேடல் கொண்ட வாழ்வில்;
முற்றுப்புள்ளி அற்ற
இறையை பற்றிப்பிடித்திடு
முதலில்!



போரும் கோளுமாய்
ஆண்ட மன்னரும்;
பேர் புகழென்று
புரண்ட எண்ணமும்;
நீராய் நெருப்பாய்
நொடியில் கரைந்திடும்;
பரஞ்சோதியின் ஒளியால்
எரிமலையும் தீபமாகும்!

அச்சம் மிச்சம்
முழுமையும் தள்ளி;
அவயம் சமயம்
யாவும் அற்று;
அவித்த நெல்லாய்
மண்ணில் நுழைந்து;
ஆதி நாதனை
தன்னில் இழந்திடு!

அண்டம் கண்டம்
அனைத்தும் கொண்டு ;
அகண்ட பிரபஞ்சம்
முழுதும் வென்று;
முற்றும் நிறைந்து
உவந்து துறந்து;
அமைதியின் துவக்கம்
தன்னுள் கண்டிடு!

கவிஞர் நூருல் நய்மா அனஸ்,தஞ்சை

# கவிதையே

கவிதையே தெரியுமா
ஒவ்வொரு வார்த்தையால் உன்னை நேசித்து
ஒவ்வொன்றையும் நான் யோசித்து
பல தருணங்களை நான் சுவாசித்து
அதனுள் உன்னை யாசித்து
நித்தமும் உன்னையே தேடுகின்றேன்
கவிதையே!



கவிஞர் சௌ.தாரா,சேலம்

# பிந்தேஷ்வர் பாடக்

மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றுவது
இன்னும் இந்நாட்டில் இருந்திடல் கொடுமையன்றோ?
பீஹாரில் பிறந்த பிந்தேஷ்வர் பாடக்
காந்தியின் கொள்கைகளால் கவர்ந்திழுக்கப் பட்டாரே!
தலித்மக்கள் முன்னேற்றம் தலையாய கடமையென
அந்நாள் முதலே அரும்பணி ஆற்றிநின்றார்!
மனிதக் கழிவுகளை கைகளால் அள்ளுகின்ற
பணியாளர்களுடன் தங்கி முனைவர் பட்டத்திற்கு
ஆய்வுகளை மேற்கொண்டார்! இழிநிலை அகன்றிட
வீட்டிற்கொரு கழிப்பறை இருந்திடல் வேண்டுமென்றார்!
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதாம் ஆண்டதனில்
'சுலப் இன்டர்நேஷனல்' என்கின்ற சமூகசேவை
அமைப்பினைத் தொடங்கினாரே! மூன்றாண்டுகளின் பின்
பொதுக் கழிப்பறை கட்டுவதன் அவசியத்தை
அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம்
வலியுறுத்தி வழிகண்டார்! பீகாரில் அமைந்துள்ள
ஆராவெனும் சிற்றூரின் நகராட்சி அலுவலகத்தில்
இருகழிப்பறைகள் அமைத்திட நிதி பெற்றார்!
ஐந்நூறு ரூபாயில் அமைந்தன கழிப்பறைகள்!
பின்னாளில் அத்திட்டம் பரவியது நாடெங்கும்!
மனிதக் கழிவுகளை மனிதர்கள் அள்ளும்
இழிநிலையை அகற்ற வித்திட்டவர் இவராவார்!
ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக அன்னவரும்
ஒடுக்கப்பட்ட மக்கள் உயர்வடைய உழைத்தாரே!
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்றாம்
ஆண்டினில் பத்மபூஷண் விருதினைப் பெற்றிட்டார்!
எழுபத்து ஏழாம் விடுதலை நாளன்று
ஏற்றினார் தேசியக் கொடியதனை! அதன்பின்
மறைந்தாரே! துப்புறவுப் பணியாளர்களின் துயர்களைய
வாழ்வுயர, அரசாங்கம் வழிவகுத்தலே அன்னாருக்கு
நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாம்!



நன்றி -இந்து தமிழ் திசை

கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# தேவைதானே இடைவேளை

தேதி நேரமின்றி உழைப்பவருக்கு
தேற்றிக்கொண்டு இளைப்பார
தேக்கமான பளுவிற்கு
தேடாமலே ஓய்வு தந்திட
தேய்ந்து போகும் உடல் உறுப்புகளுக்கு

தேவைக்கு பசும்பால் எடுத்து
தேவையான அளவு நீரும் ஊற்றி
தேயிலைத்தூளை போட்டு

தேயத்து எடுத்த ஏலத்தூளும்
தேங்கிய பித்தத்தை நீக்கிட இஞ்சியும்
தேனாக இனிக்கும் சர்க்கரையும் கலந்து
தேசிய வழக்கமான அடுப்பில் வைத்து

தேயிலை மணம் தெருவரை வீச
தேநீர் இடைவேளை சிறப்பாக்கிடுமே
தேராக ஓடி உழைக்கும் பாட்டாளிகளுக்கு!



கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# ஹைக்கூ

பூட்டிய கதவு
திறக்கும்வரை அங்கேயே இருக்கிறது .
கதவிடுக்கில் சிக்கிய பல்லி.
***

வண்ணங்கள் உதிர்த்துக் கொண்டேயிருக்கிறது
சிறகை அசைக்கும் போதெல்லாம்
பட்டாம்பூச்சி.
***

பனிவிழும் இரவு
நடுங்கி கொண்டிருக்கிறது
கூட்டில் பறவை.
***

பறித்து வைத்த நாற்று
பக்கத்திலே ஊர்ந்து செல்கிறது
பாம்பு.
***

சாரல் மழை
மெல்ல கரைய துவங்கின
கரையான் புற்று.



கவிஞர் ச.இராஜ்குமார்,திருப்பத்தூர் மாவட்டம்

# கவிஞர் கம்பதாசன்

கட்டுரை

**சிறப்பு :**



இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு இரண்டு பேரை தமிழுலகம் மறந்து விட்டது; ஒருவர் தமிழ் ஒளி; மற்றொருவர் கம்பதாசன். பன்முகப் பேராற்றல் படைத்த கம்பதாசனை தமிழ்கூறு நல்லுலகம் மறந்து விட்டதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

**பிறப்பு:**

கம்பதாசன் (செப்டம்பர் 15, 1916 - மே 23, 1973) தமிழகக் கவிஞரும், எழுத்தாளரும், திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார்.

கம்பதாசன் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் மருங்கே உள்ள உலகாபுரம் என்ற கிராமத்தில், (குலாலர்) குயவர் குலத்தில் சுப்பராயர் - பாலம்மாள் தம்பதிக்கு 1916ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி பிறந்தார். பெற்றோருக்கு இவர் ஒரே மகன். மற்றவர் ஐவரும் பெண்கள். இவரது இயற்பெயர் அப்பாவு. பெற்றோர் இவரை "இராஜப்பா" என்று செல்லமாக அழைத்தார்கள். கம்பன் மீது அதிக பற்றுக் கொண்டவர் என்பதால் கம்பதாசன் என்ற புனைப் பெயரை வைத்துக் கொண்டார்.

இவரது தந்தை சுப்பராயர் புதுச்சேரியில் உள்ள வில்லியனூரைச் சேர்ந்தவர். இவரது தாயார் பாலாம்பாள் திண்டிவனம் அருகேயுள்ள உலகாபுரம் என்னும் ஊரினர். அதன் காரணமாக கம்பதாசன் தம் தாயாரின் ஊரில் பிறந்தார். இளமையிலேயே சென்னைக்குக் குடியேறினார்

# கவிஞர் கம்பதாசன்


கட்டுரை

ஆறாம் வகுப்பு வரைதான் தனது படிப்பைத் தொடர்ந்துள்ளார். கவிஞரின் குடும்பத்தினர் அவரது இளமைப் பருவத்திலேயே சென்னையைச் சேர்ந்த புரசைவாக்கம் பகுதிக்கு குடிபெயர்ந்துள்ளனர். அங்குள்ள குயப்பேட்டை நகர சபைப் பள்ளிக் கூட்டத்திலேயே தமது படிப்பைத் தொடர்ந்துள்ளார். நடிப்புக் கலையிலே நாட்டம் ஏற்பட்டதால், ஆரம்பப் பள்ளிக்கு மேல் இவர் நாட்டம் கொள்ளவில்லை. நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். நாடகங்களுக்குப் பாட்டெழுதினார். கம்பதாசனுக்கு நல்ல குரல் வளம் இருந்தது. நாடகங்களில் பாடுவார். பாடகராகவும் புகழ் பெற்றார். ஆர்மோனியமும் வாசிப்பார்.

## வறுமையும் கவிதையும்:

அப்படிப்பட்ட கவிஞரின் வாழ்க்கையின் இறுதிப் பகுதியில் பத்தாண்டுகள் வறுமையில் வாடி துயரங்களை அனுபவித்தார். அதனை அவரே இப்படிக் கூறுகிறார்:

"இன்று என்னை வறுமையில் ஆழ்த்தி, என் வாழ்வைக் குலைத்த சிறுபகை, நரிகளின் கூட்டம். நான் இவ்வுலகை விட்டு இறந்த பிறகாவது உண்மைக் கவிஞன், உலக மனிதன் என்று ஏற்குமாகில் இயேசு கிறிஸ்து கூறியது போல், அவர்கள் அறியாமல் செய்து விட்டார்கள், அவர்களை மன்னியுங்கள் என்று எனது ஆத்மா சாந்தியடையும்."



*"நித்தம் வறுமையில் நெஞ்சழிந்து - தன்னை*
*நேசனெனச் சொல்ல யாருமின்றி*
*பித்தன் இவனெனக் காட்சிதந்து - உயிர்*
*பிரிந்தபின் புகழைப் பெறுபவர் யார்?"*

# கவிஞர் கம்பதாசன்

கட்டுரை

வாழும் காலத்தில் வறுமையும், அன்பு பாராட்ட ஆட்கள் இல்லாத வெறுமையுமாய் வாழ்ந்தவனுக்கு மரணத்துக்குப் பின் கிடைக்கும் புகழால் பயன் என்ன என்று கவிஞர் கேட்கும் கேள்வி பொருள் பொதிந்தது.

கவிஞரின் வறுமைக்குக் காரணம் அவரது திட்டமிடப்படாத வாழ்க்கை முறையேயாகும். அன்றைய தினம் தமிழ்க் கவிஞர்களில் திரைப்படப் பாடல் எழுதுவதற்கு அதிகத் தொகை வாங்கிய முதல் கவிஞர் கம்பதாசனே!

திரை துறையில் கம்பதாசன்:

இவர் கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் சகோதரர். இவரே இந்தித் திரைப்பட இசையமைப்பாளர் நௌஷாத்திடம் கம்பதாசனை அறிமுகம் செய்து வைத்தவர்.

மிகவும் இளமைக் காலத்திலேயே 'திரௌபதி வஸ்திராபரணம்', 'சீனிவாச கல்யாணம்' போன்ற படங்களில் தனது நடிப்புத் திறனைத் காட்டி நின்றார். 1940ஆம் ஆண்டில் வெளிவந்த வாமன "அவதாரம்" என்ற படத்திற்கு

"சூரியனும் ஒரு தொழிலாளி - தினம்
சுற்றும் உலகும் தொழிலாளி
வாரி அலையும் தொழிலாளி - எதிர்
வந்திடும் காற்றும் தொழிலாளி
மாரி நதியும் தொழிலாளி - இருள்
மலரும் உடுவும் தொழிலாளி
பாரை நடத்தும் தொழிலாளி - இன்
பரமனடா கலை பிரமனடா"

என்ற முதல் பாடலாக இந்த பாடலை எழுதினார்.

# கவிஞர் கம்பதாசன்

கட்டுரை

அதனைத் தொடர்ந்து வேணு கானம், மகாமாயா, பூம்பாவை, மங்கையர்க்கரசி, ஞானசௌந்தரி, அவன், வானரதம்போன்ற பல திரைப்படங்களுக்கு பாடல்கள் எழுதியும், கதை வசனம் எழுதியும் புகழின் உச்சியில் காணப்பட்டார். இதில் அவன், வானரதம், அக்பர் போன்ற திரைப் படங்களில் இவர் எழுதிய பாடல்கள் இன்னும் காலத்தால் அழியாத பாடல்களாகவும், திரைப்பட ரசிகர்களால் மறக்க முடியாத பாடல்களாகவும் காணப்படுகின்றன.

தமிழில் மறுமலர்ச்சிப் பாடல்களை எழுதத் தொடங்கினார். சமதர்மக் கொள்கை கொண்ட கம்பதாசன், தாம் எழுதிய திரைப்படப் பாடல்களில் முற்போக்குக் கருத்துகளை எளிய நடையில் புகுத்தினார்.

தமிழ் உணர்வுமிக்க அவருக்குப் போட்டிகள் நிறைந்த திரையுலகம் அதிக வாய்ப்பைத் தராவிட்டாலும், குரல் அசைவுப் படங்களுக்கு (டப்பிங்) அதிகம் எழுதியிருக்கிறார். "வானரதம்" என்ற இந்தித் திரைப்படத்தின் தமிழாக்கப் பாடலில் எளிய தமிழைப் பயன்படுத்தினார்.

கம்பதாசனின் கவித்திறமையை அடையாளங்காட்டி "கனவு" என்ற கவிதை நூல் 1941இல் வெளிவந்தது

### பாரதிதாசன் வாழ்த்தில் கம்பதாசன்:


இவரது நூல்கள் பற்றிப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாராட்டியுள்ளார்: "கம்பதாசன் எழுதும் நூல்கள் எனக்கு மகிழ்ச்சியை அளிக் கின்றன. அவை அவராலேயே இயற்றப்பட்டவை. அவரின் நெஞ்சினின்று தங்கு தடையின்றி எழும் ஊற்று. உண்மையில் கம்பதாசன் எண்ணம் நன்று. கவிதை உள்ளம் நன்று. நல்ல கற்பனையே புதுமையை வரவேற்கும் தன்மையே அதைப் போற்றும் ஆற்றலைக் காணுகின்றேன்" என்று கூறியுள்ளார்.

# கவிஞர் கம்பதாசன்

கட்டுரை

**எழுதிய நூல்கள்:**

- கனவு; 1941; வங்கக்கவி ஹரிந்தீரநாத் முன்னுரையுடன்
- விதியின் விழிப்பு
- முதல் முத்தம்
- அருணோதயம்
- அவளும் நானும்
- பாட்டு முடியுமுன்னே
- புதுக்குரல்
- தொழிலாளி
- நாடக நூல்கள்தொகு
- ஆதிகவி
- சிற்பி




**சிறுகதைத் தொகுதி:**

- முத்துச் சிமிக்கி
- சிலோன் விஜயேந்திரன்தொகுத்து வெளியிட்டவை
- கம்பதாசனின் கவிதைத் திரட்டு (1987)
- கம்பதாசன் திரை இசைப்பாடல்கள் (1987)
- கம்பதாசன் காவியங்கள் (1987)
- கம்பதாசன் சிறுகதைகள் (1988)
- கம்பதாசன் நாடகங்கள் (1988)
- கம்பதாசன் கவிதா நுட்பங்கள் (1997)

# கவிஞர் கம்பதாசன்

கட்டுரை

**திரைப்பட பாடல்கள்:**

- மின்னல் போலாடுமிந்த வாழ்க்கையே (1953)
- கனவு கண்ட காதல் கதை கண்ணீராச்சே (அக்பர்- 1961, இசை - நொவ்ஷத், பாடியவர்: பி. சுசீலா
- கல்யாண ஊர்வலம் வரும் உல்லாசமே தரும் (அவன் - 1953, இசை -சங்கர் ஜெய்கிஷன், பாடியவர்: ஜிக்கி




*"பாம்பு இளைப்பாற புற்று,*
*பருந்து இளைப்பாற கூடு*
*கண் இளைப்பாற தூக்கம்*
*கழுதை இளைப்பாற துறை...என்று*
*பறவைகளும் மற்ற விலங்கினங்களும்*
*இளைப்பாறிட இடம் உண்டு - எங்களுக்கு?"*

என்ற கவிதை இதுவரை எந்தக் கவிஞரும் சிந்திக்காதது.

**இறப்பு:**

கவிஞரின் கடைசிக் காலம் வேதனை மிகுந்தது. வறுமை, காதல் தோல்வி, காசநோய் மூன்றும் வாட்டி வதைக்க சமூகத்தின் புறக்கணிப்பால் தனித்து விடப்பட்ட கம்பதாசன் இராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் 1973 மே 23இல் ஓர் அநாதையைப் போல மரணத்தைத் தழுவினார்.

கவிஞர் குமர தர்மசீலன்,இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
எத்தனை கைகள் உன்னை
கை விட்டாலும் உன் நம்பிக்கை
உன்னை கை விடாது..!
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே!   முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com
Aagaramuthalaa

aagaramuthala@gmail.com